Registered as a Newspaper

இப்பொழுது
விற்பனையாகின்றது
VELONA
தயாரிப்புக்களை யாழ்நகரில்
மொத்தமாகப்
பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்
"ARTHE GROUP"
தொடர்புகொள்க:
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
(VT) லிமிட்டெட்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை:
ரூ. 1-25

Now Available
All kinds of
VELONA PRODUCTS
[WHOLESALE]
★ Hairins
★ Ladies Vestes
★ Panties
Etc. Etc.
"ARTHE GROUP"
Contact:
ARTHE JEWELLERS
Pvt. Ltd.
111, Kasturiar Road,
Jaffna.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆடி மீ 7 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1407 துல்ஹஜ் பிறை 26 (23 — 07 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 204

# அரசியல் தீர்வுக்கு அங்கீகாரம் பெற அவசியம் ஏற்படின் பொதுத்தேர்தல்

## ஜனாதிபதி ஜே. ஆர். புதிய சுருதி

கொழும்பு, ஜூலை 23

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு எனது அமைச்சரவை ஆளும் நாடளுமன்றக் குழு, பின்னர் நாடாளுமன்றம் ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட வேண்டும். இது முடியாவிடின் அவசியம் ஏற்படின் பொதுத் தேர்தலை நடத்தி அங்கீகாரம் பெற அரசு தயங்காது.

ஜனாதிபதி ஜெயவர்த்தன மேற்கண்டவாறு புதிய சுருதியில் பேசியிருக்கிறார்.

ஐ. தே. க. பதவிக்குவந்த பத்தாண்டு நிறைவை ஒட்டி நேற்று புறக்கோட்டையில் நடத்தப்பட்ட பொதுக் கூட்டத்தில் ஜனாதிபதி பேசினார். அப்போதே முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

ஜனாதிபதி மேலும் சொன்னதாவது;--

இனப்பிரச்சினைக்கு அஹிம்சை வழியிலேயே தீர்வு காண அரசு விரும்புகின்றது. இராணுவத் தீர்வு காணுவதல்ல எனது அரசின் நோக்கம்.

மக்கள் கொல்லப்படுவதை நான் விரும்பவில்லை. தீவிரவாதிகளும் கொல்லப்படுவதையும் நான் விரும்பவில்லை. இதனால்தான் அரசியல் தீர்வு ஒன்றைக் காண எனது கட்சி உறுதி பூண்டுள்ளது.

இன்று நாடு நாற்சந்தியில் (Cross Road) நிற்கின்றது. நாடு ஒரு துக்ககரமான நிலையை அடையக் கூடாது என்பதால்தான் அரசியல் தீர்வுக்கு முழு முயற்சி எடுத்து வருகின்றோம்,

இன்று வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஒழுங்கு, ஜனநாயகம் இல்லை. மனிதாபிமான அடிப்படையில்தான் பிரச்சினைக்குத் தீர்வுகாண விரும்புகின்றோம்— இப்படி ஜனாதிபதி தெரிவித்தார். (அ-எ)

## டிக்ஸிற் திரும்புகிறார்

புதுடில்லி, ஜூலை 23 இலங்கைக்கான இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் நேற்று மாலை புதுடில்லியில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்தபின் னர் அவர் கொழும்பு நோக்கிப் புறப்பட்டார்.

இலங்கை இனப் பிரச்சினையின் பிந்திய நிலை குறித்து இருவரும் பேசினர். (உ-எ)

## தூதுவர் பெர்னுட் ராஜீவைச் சந்தித்தார்

### பிந்திய நிலைபற்றி எடுத்துரைப்பு

புதுடில்லி, ஜூலை 23 இலங்கைத் தூதர் பெர்னுட் திலகரத்தின நேற்று இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேசினார்.

இனப்பிரச்சினைத் தீர்வு பற்றிய பிந்திய நிலையை திரு. திலகரத்தின பிரதமருக்கு எடுத்துரைத்தார் என்று தெரியவருகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இருந்து புதுடில்லி திருப்பிய இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற ஏற்கனவே பிரதமர் காந்தியைச் சந்தித்து விரிவாகப் பேச்சுக்கள் நடத்தியிருந்தார்.

இதனிடையில் சென்னை வந்த இந்திய உயர் அதிகாரிகள் குழு, செவ்வாய் மாலையே புதுடில்லி திரும்பியது.

இக்குழு திங்கள் மாலை சென்னை வந்தது.

முதலமைச்சர், தமிழர் அமைப்புப் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்த இக்குழுவுக்கு வெளியுறவுச் செயலாளர் கே. பி. எஸ். மேனன் தலைமை வகித்தார்.

குழுவுடன் கொழும்பு இந்தியத் தூதரக முதலாவது அரசியல் செயலாளர் ஹார்டிப் சிங் பூரியும் புதுடில்லி திரும்பினார்.

## இலங்கைப் பிரச்சினை அமெரிக்க காங்கிரஸில்

### ஜோசப் கென்னடி எழுப்புவார்

நியூயார்க், ஜூலை 23 இலங்கை இனப்பிரச்சினையை அமெரிக்க காங்கிரஸில் எழுப்பப்போவதாக திரு. ஜோசப் கென்னடி அறிவித்திருக்கின்றார்.

மசாசூசெட்ஸ் மாநிலத்தில் உள்ள ஒரு தொகுதியைப் பிரதிநிதித்துவம் செய்யும் திரு. ஜோசப் கென்னடி, காலஞ்சென்ற திரு. ரொபர்ட் கென்னடியின் புதல்வர். காலஞ்சென்ற ஜனாதிபதி ஜோன் கென்னடியின் சகோதரர் திரு. ரொபர்ட் கென்னடி.

இருவரும் கட்டுக் கொல்லப்பட்டனர்.

இலங்கையில் நடைபெறும் அக்கிரமமான சிவில் யுத்தம் பற்றி அமெரிக்கா நன்கு உணர வேண்டும். மனித உரிமை மீறல்களை நிறுத்தி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வருவதற்கு இலங்கை அரசு அனுமதிக்க வேண்

(4ஆம் பக்கம் பார்க்க)

## சல்லி ஆலயம் கொள்ளை

பிரசித்திபெற்ற சல்லி அம்மன் ஆலயம் இனந்தெரியாத நபர்களினால் கொள்ளை இடப்பட்டது. சாம்பல்தீவுக் கிராமத்துக்கு அருகில் இச்சல்லி அம்மன் ஆலயம் உள்ளது.

ஆலயம் உடைக்கப்பட்டு மூலஸ்தானத்தில் இருந்து தங்க நகைகள் மற்றும் பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ-150)

## ஆசிரியர் சம்பளம்

யாழ்ப்பாணம், ஜூலை23 யாழ். மாவட்டத்தில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இந்த மாதத்துக்கான சம்பளக் காசோலையுடன் வரட்சி நிவாரணமாக 3 மாதச் சம்பள முற்பணமும் சேர்த்து நேற்று வழங்கப்பட்டது.

முற்பணம் வழங்கும் நடவடிக்கையினால் இவர்களுக்கான சம்பளக் காசோலைகள் இரண்டு நாட்கள் தாமதமாகின.

இவ்வாறு யாழ். கல்வித்திணைக்கள நிதி உதவியாளர் பி. சண்முகலிங்கம் தெரிவித்தார். (இ-7)

## அடையாளக் கார்ட் வழங்கும் வேலை இடைநிறுத்தம்

வடமராட்சி, ஜூலை 23 வடமராட்சி மக்களுக்கு அடையாளக் காட் வழங்கும் வேலை நேற்று இடைநிறுத்தப்பட்டது.

இது தொடர்பான அறிவிப்பு யாழ் வானொலியில் வெளிவந்த போதிலும் புலோலி பொலிஸ் நிலையத்தின் முன்னால் அடையாளக் கார்ட்டுக்காக பலர் நிற்கக் காணப்பட்டனர்.

அடையாளக் கார்ட் வழங்கும் வேலை இடைநிறுத்தப்பட்டிருப்பதாக பொலிஸ் அதிகாரிகள் வந்து கூறியதை அடுத்து அவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். (இ-160)

## மன்சூர் நேற்று புலோலி சென்றார்

யாழ்ப்பாணம், ஜூலை 23 யாழ் மாவட்டத்துக்கான ஜீ. சி. எ. வகுத்தார்கள் கையேற்பதற்காக யாழ் மாவட்ட அரசு அதிகாரி பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் நேற்று புலோலி சென்றார் என்று தெரிய வருகிறது.

இவர் அங்கு செல்லும் போது சுமார் 10 உயர் அதிகாரிகளையும் அழைத்துச் சென்றார்.

## பொருள்களை எடுத்துச் செல்ல இராணுவம் அனுமதி

### உதவியும் செய்கிறார்கள்

வடமராட்சி, ஜூலை 23 உடுப்பிட்டி நாவலடியில் உள்ள பொலிஸ் காவல் நிலையப் பகுதியில் எஞ்சி உள்ள வீடுகளில் இருக்கும் பொருள்களை எடுத்துச் செல்ல வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு இராணுவத்தினர் அனுமதி அளித்துள்ளனர்.

பொருள்களை ஏற்றுவதற்கு இராணுவத்தினர் உதவியும் செய்கிறார்களாம்.

நாவலடியில் சின்னக்கண்டு என்பவருடைய வீட்டில் பொலிஸ் காவல் நிலையமாக மாற்றப்பட்டுள்ளது.

இதைச் சுற்றியுள்ள சில குடிசைகள் இராணுவத்தினரால் கொழுத்தப்பட்டுள்ளன.

சில வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன.

சேதப்படுத்தப்படாத வீடுகளில் உள்ள பொருள்களை எடுத்துச் செல்லவே வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு இராணுவத்தினர் அனுமதியளித்துள்ளனர்.

பலர் வண்டில்கள், சைக்கிள்களில் தமது பொருள்களை ஏற்றிச் சென்றதை நேற்றுக் காணக் கூடியதாக இருந்தது. (இ-169)

## தீர்வு காணவே இந்தியா விரும்புகிறது

### திவாரி கூறுகின்றார்

போர்ட் லூயி, ஜூலை 23 இலங்கைத் தீவில் நிலவும் பிரச்சினைகளுக்கு சாத்தியமான தீர்வைக் காணவே இந்தியா விரும்புகின்றது.

இந்திய வெளியுறவு அமைச்சர் நாராயணதத் திவாரி முன்சொன்னவாறு சொன்னார்.

மொரீஷியஸ் நாட்டு விஜயத்தின் முடிவில் செய்தியாளர் மத்தியில் திவாரி பேசினார்.

வகூடா, தென் ஆபிரிக்க நிறவேற்றுமை ஆகிய பிரச்சினைகள் பற்றியும் அமைச்சர் கருத்து வெளியிட்டார்.

மொரிஷியஸுக்கு இந்தியா 9 கோடி 20லட்சம் ரூபா மானியமாகக் கொடுக்க ஒப்புக்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (இ-எ)

## சுபநேரம்

23-07-1987
வியாழக்கிழமை
சுபநேரம்:—
7 32 முதல் 9. 02 வரை
ராகுகாலம்:—
1 32 முதல் 3.02வரை
தெய்வ பக்தர்க்கு
இராகுகால பொருந்தும்

## எம்.ஜி.ஆர்-கிட்டு சந்திப்பு

சென்னை, ஜூலை 23

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உபதளபதி கிட்டு நேற்று தமிழ்நாடு முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரனைச் சந்தித்துப் பேசினார்.

புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், ரகு ஆகியோரும் திரு. கிட்டுவுடன் சென்றிருந்தனர்.

சந்திப்பு 45 நிமிடங்கள் நீடித்தது.

கடந்த செவ்வாய்க் கிழமையன்று இந்திய வெளியுறவுச் செயலாளர் கே. பி. எஸ். மேனன், கே. என். டிக்ஸிற், பூரி குழுவினருடன் தாம் நடத்திய பேச்சுக்களின் விவரம் குறித்த, இந்தச் சந்திப்பின் போது தமிழக முதலமைச்சருக்கு தாங்கள் எடுத்துக் கூறியதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

இதேவேளை மற்றைய தமிழர் அமைப்புக்களும் தமிழக முதலமைச்சரைச் சந்தித்துப் பேசியதாகத் தெரியவருகின்றது. (உ-எ)

## யாழ் கோட்டையிலிருந்து வெளியேற முயன்ற சிப்பாய்களுடன் சமர்

### போராளி ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 23 யாழ் கோட்டை முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் மீது நேற்று போராளிகள் தாக்குதல் நடத்தினர்.

இராணுவத்தினரும் திருப்பித் தாக்குதல் நடத்தியதில் போராளி ஒருவர் கொல்லப்பட்டார். சிலர் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை இச்சம்பவம் இடம் பெற்றது.

இராணுவத்தினர் பண்ணைக்கடைப் பக்கமாகவே வெளியேற முயன்றனர். போராளிகளின் தாக்குதலினால் இராணுவத்தரப்பில் சேதம் ஏற்பட்டிருக்கக்கூடும் எனவும் நம்பப்படுகிறது. (இ-10)

## தமிழாராய்ச்சி மாநாடு

### நவ: 15 இல்

கோலாலம்பூர், ஜூலை22 ஆறாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு கோலாலம்பூரில் எதிர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முக்கிய அறிவித்தல்

லங்கா சீமெந்து லிமிட்டெட், காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபன பொது முகாமையாளர்கள் சகல சீமெந்துத் தொழிற்சாலை ஊழியர்களையும், துறைமுக ஊழியர்களையும் ஜூலை 23 ஆம் திகதி 1987 இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கும் 10 மணிக்கும் இடையில் யாழ்ப்பாணம் மாவிட்டபுரம், காங்கேசன்துறை வீதியினூடாக தேசிய அடையாள அட்டை, தொழிற்சாலை அடையாள அட்டைகளுடன் கடமைக்குச் சமூகமளிக்குமாறு வேண்டிக்கொள்கின்றனர்.

பொது முகாமையாளர்
லங்கா சிமெந்து லிமிட்டெட்

பொது முகாமையாளர்:-
ஸ்ரீலங்கா சீமெந்து கூட்டுத்தாபனம்

130, W. A. D. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு — 02.

முச்சந்தி முரளி



பாத்தியோ, பாத்தியோ! அவை தயாரிச்ச புது யோசனை என்னெண்டு இன்னும் பிரசித்தப்படுத்தேல்லை. அதுக்கிடையிலை ஒருக்கா சர்வஜன வாக்கெடுப்பெண்டு, ஒருக்கால் பொதுத் தேர்தல் எண்டு கருத்துமாறுறது

## இடைக்காலத் தீர்வு எதற்கும் ஈரோஸ் இடையூறாக இராது

### பொது ஆணைக்குழு உதயனுக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 23 இடைக்கால யோசனைகள் பரபரப்பை ஏற்படுத்தலாம். இராணுவ கெடுபிடிகளை ஒத்திவைக்க உதவலாம். ஆனால், அடித்தள மக்களின் எண்ண அபிலாஷைகளுக்கு எவ்வகையிலும் தீர்வு காணாது என்பது நிச்சயமான தொன்று.

ஆனால், இடைக்காலத் தீர்வில் நம்பிக்கை வைத்து அப் பேச்சுக்களில் ஈடுபடும் தேசிய சக்திகளின் அனுபவங்களுக்கு நாம் என்றும் இடையூறாக இருந்ததுமில்லை; இருக்கப் போவதுமில்லை.

இவ்வாறு ஈழப்புரட்சி அமைப்பின் பொது ஆணைக்குழு சார்பில் அனுப்பப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"இடைக்காலத் தீர்வு எதையும் ஈரோஸ் இயக்கம் ஏற்காது. புதிய யோசனை இந்தியாவை இழுத்தடிக்கும் அரசின் தந்திரம், திறைசேரியும் குழு உறுப்பினர் நேசன் பேட்டி" என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் முன்பக்கமுதற் செய்தி வெளிவந்திருந்தது அல்லவா?

அது சம்பந்தமாகவே ஈரோஸ் பொது ஆணைக்குழு சார்பில் திரு. பாலா எழுதிய ஒன்றை அனுப்பி வைத்தார்.

செய்தியை எழுதிய சம்பந்தப்பட்ட நிருபர் டைம்ஸ் பத்திரிகையில் குறிப்பிட்டிருந்த விடயங்களை பேட்டியாக அளித்திருக்கவில்லை.—

ஈழப்புரட்சி அமைப்பு சென்னையில் நிரந்தரமில்லை. பேச்சுக்கள் குறித்த தகவல்களை மட்டுமே தெரிவித்திருந்தோம்.—

நாம் ஓர் போராட்ட அமைப்பே அன்றி ஏட்டிக்குப் போட்டியான அமைப்பல்ல. சில நாட்களில் எம்மை இந்தியா

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

★★★★★★★★★
★ சின்னஞ்சிறு ★
★ விளம்பரம் ★
★★★★★★★★★

**தவறிவிட்டது**

441280939V இலக்கமுடைய எனது அடையாள அட்டையும் டயறியும் 19-07-1987 அன்று நல்லூருக்கும் யாழ் பல்கலைக்கழகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அம்பலவாணர் திருநெல்லையம்பலம், அராலி தெற்கு, அராலி என்னும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(1299)

# வயோதிபர்கள் பலர் பட்டினியால் சாகும் அபாயம் உருவாகலாம்

வடமராட்சி, ஜூலை 23

வடமராட்சியில் மண்டான் போன்ற இடங்களில் உள்ள வயோதிபர்கள் பட்டினியால் சாகும் நிலை உருவாகலாம்.

வடமராட்சி நிர்வாகம் சம்பந்தமான முக்கிய கூட்டம் சாவகச்சேரி உதவி அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

வடமராட்சி உதவி அரச அதிபர் திரு. இ. ஐயாத்துரை பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

வடமராட்சியைச் சேர்ந்த கிராம சேவகர்கள், நிர்வாக அதிகாரிகள், எழுதுவினைஞர்கள், வெளிக்கள அதிகாரிகள் பெரும்பான்மையோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

★ வடமராட்சியில் தற்போது தங்கியுள்ள வயோதிபர்களுக்கு நிவாரணம் வழங்குவது.

★ அரச உத்தியோகத்தர்களின் உயிர்களுக்கு உத்தரவாதம் வழங்குவது ஆகிய இரண்டு விஷயங்களும் கூட்டத்தில் ஆராயப்பட்டன.

உதவி அரச அதிபர் பேசும் போது மேலும் சொன்னதாவது;

வடமராட்சியில் தற்போது 20 சதவீதத்தினரே வசித்து வருகின்றனர். அவர்கள் அனைவரும் வயதுபோனவர்கள் அவர்கள் உணவுப் பிரச்சினையால் கஷ்டப்படுகின்றனர்.

உணவுப் பொருள்களை பாதுகாப்பாக வைக்க முடியவில்லை. நெல்லியடி வடமராட்சி போன்ற இடங்களில் உள்ள கடைகள் யாவும் உடைக்கப்பட்டுள்ளன. களஞ்சியங்கள் யாவும் காலியாகவே உள்ளன.

இந்த நிலையில் வடமராட்சியில் உள்ளவர்களுக்கு எப்படி உணவு வழங்குவது?

இருந்தும் நாம் அவர்களுக்கு உணவு நிவாரணம் வழங்க விரும்புகின்றோம்.

எம் உயிருக்கு இராணுவத்தினால் உயிர்ப் பாதுகாப்பு உத்தரவாதம் தரப்படவில்லை. எனவே நான் அரசு ஊழியர்களை கட்டுப்படுத்தவில்லை.

இப்படி உதவி அரச அதிபர் சொன்னார்.

காலை 10 மணிக்கு ஆரம்பமான கூட்டம் நண்பகல் அளவில் எவ்வித முடிவும் எடுக்கப்படாமல் முடிவடைந்தது. (இ-எ-160)

## அடையாளத்தை உறுதிப்படுத்த புகைப் படங்களும் சமர்ப்பிக்கலாம்!

யாழ்ப்பாணம், ஜூலை 23

இவ்வருடம் ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தம்மை உறுதிப்படுத்தத் தேசிய அடையாள அட்டை, தபால் அடையாள அட்டை, கடவுச்சீட்டு என்பவற்றுடன் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டு, கல்விப் பணிப்பாளரால் மேலொப்பமிடப்பட்ட புகைப்படங்களையும் சமர்ப்பிக்கலாம்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் கிராம சேவகரால் உறுதிப்படுத்தப்பட்டு, உதவி அரசாங்க அதிபராலும், கல்விப் பணிப்பாளராலும் மேலொப்பமிடப்பட்ட புகைப்படங்கள் அனுமதிக்கப்படும்.

இவ்வருடம் புகைப்படம் ஏற்கப்படமாட்டாதென வந்த வதந்தி தவறானது. (உ-119)

## தற்காலிகமான அனுமதி அட்டைகளும் விநியோகிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 23

ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்கான பரீட்சை நிலைய அனுமதியட்டைகளைப் பரீட்சார்த்திகள் யாரும் இதுவரை பெறாதிருந்தால் — தற்காலிக அனுமதிஅட்டைகளை யாழ். கல்வித் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்படி பரீட்சார்த்தியின் பெயர் கல்வித் திணைக்களத்தில் இதற்கான வரவுப் புத்தகத்தில் இருந்தால் மட்டுமே தற்காலிக அனுமதி அட்டை வழங்கப்படும்.

இதற்கான ஏற்பாடுகளை யாழ் கல்வித் திணைக்களம்மேற்கொண்டுள்ளது. (உ-119)

## பூநகரி வந்த அகதிகள் விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ் மாவட்டத்திலிருந்து பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அகதிகளாக வந்து தங்கியோரின் விவரங்களைப் பூநகரி பிரசைகள் குழு சேகரித்து வருகிறது.

அகதிகளாக வந்துள்ளோர் நிவாரண உதவி பெற்றுத்தருமாறு கோரி வருகின்றனர். (இ)

## காணவில்லை

கொடிகாமம், ஜூலை 23

நெல்லியடி சைக்கிள் உதிரிப்பாக விற்பனையாளர் செல்லத்துரை என்பவரையும் விவசாயியான நல்லதம்பி என்பவரையும் காணவில்லை என்று கூறப்படுகிறது.

இவர்களை உறவினர்கள் தேடி வருகின்றனர். (இ-75)

## மாணவர் பகிஷ்கரிப்பு தொடர்கிறது

கொழும்பு, ஜூலை 23

களனி, மொரட்டுவ ஸ்ரீ ஜெயவர்த்தன புர பல்கலைக் கழகங்களில் மாணவர் பகிஷ்கரிப்பு தொடர்கிறது.

கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள மாணவர்களை விடுவிக்கும் படிகோரியே இப்பகிஷ்கரிப்பு நடத்தப்படுகின்றது.

கொழும்பு பல்கலைக் கழகத்தில் வைத்திய, கல்விப்பீடங்களைத் தவிர ஏனைய பீடங்களைச் சேர்ந்த மாணவர் பகிஷ்கரித்து வருகின்றனர். (இ-எ)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## 5 எதிர்க்கட்சித் தலைவர்கள் நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 23

ஐந்து எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் இன்று வியாழக்கிழமை கொழும்பு மாநகர வீதிகளில் உள்ளூராட்சி தேர்தல் பகிஷ்கரிப்பு துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சி, நவசமசமாஜக் கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் தலைவர்கள் இந்த இயக்கத்தில் ஈடுபடுவர்.

இதனிடையில் இம்மாதம் 30 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 13 ஆம் திகதிவரை எதிர்க்கட்சிகளின் பகிஷ்கரிப்புப் பிரசாரக் கூட்டங்கள் நாட்டின் பல பகுதிகளிலும் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

கம்பன் விழா இறுதி நாளில் தலைமை உரை

# துன்பத்தின்பின் இன்பம் இதையே இதிகாசங்கள் சொல்கின்றன

யாழ்ப்பாணம், ஜூலை 23

பெரும்பாலும் துன்பத்தில் வாழ்ந்த கதாநாயகர்கள் ஈற்றில் இன்பத்தில் வாழ்ந்த நிகழ்ச்சிகளை இதிகாச, புராண, காப்பியங்கள் எமக்கெல்லாம் எடுத்துக்காட்டி எம்மைச் சிந்திக்க வைக்கின்றன. இன்று நடைபெறுகின்ற கம்பன் விழாக் கூட இன்றைய சமகால நிகழ்ச்சிகளை எல்லாம் எமக்குத் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கிறது. இக்காலத்தில் வாழ்கின்ற மக்கள் எப்படி வாழவேண்டும் என்பதையும் இவ்விழா பறைசாற்றுகின்றது.

அகில இலங்கைக் கம்பன் கழக மூன்றாவது நாள் மாலை நிகழ்ச்சியில் தலைமையுரை நிகழ்த்திய முன்னாள் அரசாங்க அதிபர் திரு. ஜெகாசெந்தில்நாதன் மேற்கண்டவாறு கூறினார்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்ற இவ்விழா திரு. என். கே. பத்மநாதன், திரு எம். பி. நாகேந்திரம், திரு. ஆர். புண்ணியமூர்த்தி குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பமானது.

'ஷப்ரூ' உதயன்-சஞ்சீவி நிர்வாக இயக்குநர் திரு. ஈ. சரவணபவன் தம்பதிகள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார்கள்.

திரு. இ. ஜெயராஜ் வரவேற்புரை நிகழ்த்தும் போது, கம்பன் விழாவைப் பார்க்கும்போது தமிழ் வாழும் என்ற துணிவு ஏற்படுகிறது' என்று கூறினார்.

இவ்விழாவில் தொடக்கவுரை நிகழ்த்திய திரு. சி. தியாகராசா (எஸ் ரி, ஆர்) பேசும்போது. 'கலையரசு சொர்ணலிங்கம் போன்ற கலைஞர்களது பாணியில் நாடகம் வளரவேண்டும். இன்று நாடகக்கலை வளர்ச்சி யாழ்ப்பாணத்தில் குன்றி வருகிறது. ஏன்? அது அழிந்துவிட்டது என்று கூடக் கூறலாம்.

அதை நாம் எல்லோரும் ஒத்துழைத்து வளர்க்க வேண்டும். அதுவும் சொர்ணலிங்கம் பாணியில் வளர்க்க வேண்டும் என்று கூறினார்.

முதல் நாள் (கவியரங்கின்போது) பட்டி மண்டபத் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீட்டு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிகளுக்கு வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்) தலைமை வகித்தார். இவரது தலைமையில் திரு சி. வி. கே. சிவஞானம், திரு. இ. முருகையன் ஆகிய இருவரும் நடுவர்களாகக் கடமையாற்றினர்.

வித்துவான் சி. குமாரசாமி வழக்கைப்பற்றிய பதிவாளர் விளக்கத்தை வாசித்தார்.

இன்றைய சூழலில் எம்மவர் நெஞ்சில பெரிதும் பதியவேண்டியது கும்பகர்ணன் வீரமே என்று திரு. சோ. பத்மநாதனும் சீதையின் உறுதியே என்று கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயரும், சுமித்திரையின் தியாகமே என்று திரு. இ. ஜெயராஜும் வாதிட்டனர்.

இந்த வாதத்தில் சீதையின் உறுதியே அவசியம் என்பது முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்டது.

மூன்றாம்நாள் காலை நிகழ்ச்சி நாவலர் கலாசாரமண்டபத்தில் யாழ். பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத்தலைவர் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை தலைமையில நடைபெற்றது.

கம்பன் கழக அமைப்பாளர் திரு இ. ஜெயராஜ் வரவேற்புரை நிகழ்த்தினார்.

பண்டிதர் க. வீரகத்தி தொடக்கவுரை நிகழ்த்தினார்.

கலாநிதி இ. பாலசுந்தரம் தலைமையில் எண்களும் பெண்களும் என்னும் தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

வித்துவான் க. சொக்கலிங்கம், கலாநிதி நா. பிரமணியஐயர் ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.

## ஷெல் தாக்கு

குருநகர், ஜூலை 23

செவ்வாய்காலை யாழ். கோட்டை இராணுவ முகாமில் இருந்து கொட்டடிப் பக்கமாகவும், மண்டைதீவு 'மினி' முகாமில் இருந்து அல்லைப் பிட்டி அல்லேமனியத்தொழிற் சாலைப் பக்கமாகவும் பத்துக்கும் மேற்பட்ட ஷெல்கள் ஏவப்பட்டன. (உ-ரி)

## ஆஸ்பத்திரி திருத்தவேலை தாமதம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

அலஸ் விசாரணைக் குழு பார்வையிடுவதற்காக யாழ் ஆஸ்பத்திரியின் சேதமடைந்த கட்டடங்கள் திருத்தப்படாது அப்படியே விடப்பட்டுள்ளன.

யாழ் ஆஸ்பத்திரியின் சேதமடைந்த கட்டடங்களைத் திருத்தி அமைப்பதற்கு போதனா வைத்தியசாலைகள் அமைச்சு அனுமதி அளித்துள்ளது தெரிந்ததே.

எனினும் அலஸ் குழுவினர் பார்வையிட வேண்டும் என்பதற்காக திருத்த வேலைகள் தாமதப்படுத்தப்பட்டுள்ளது. (இ-10)

## கொள்ளை

கொடிகாமம், ஜூலை 23

அண்ணாவையும் தம்பியையும் அறையில் பூட்டி வைத்துவிட்டு நகை, பணம் உட்பட பெரும் தொகையான பொருள்கள் அபகரிக்கப்பட்டன.

இச்சம்பவம் நெல்லியடியில் இளைப்பாறிய ஆசிரியர் ஒருவரின் வீட்டில் நடைபெற்றது. (இ-75)

தீர்வு ஏற்பட்டதும்

# வடக்கு, கிழக்கிற்கு ஆயிரம் கோடி ரூபா நிதிவழங்கஉலகநாடுகள் தயார்

கொழும்பு, ஜூலை 23

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டதும் வடக்கு, கிழக்குப் பகுதிகளை மீண்டும் கட்டி எழுப்ப ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேல் உதவ உலக நாடுகள் பல முன் வந்து உள்ளன.

—இப்படி நிதி அமைச்சர் ரொனி டி மெல் கொழும்புச் செய்தியாளர் ஒருவரிடம் தெரிவித்தார்.

சமாதானத் தீர்வுக்கான நல்ல சூழ்நிலை தோன்றியுள்ளது. ஓரிரு தினங்களில் நல்ல முடிவுகள் காணப்படும்.

எல்லாம் சரிவந்தால் மாநில அமைப்புலம் புனர்நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்படும்.

—இப்படி நிதி அமைச்சர் தெரிவித்தார். (உ-எ)

## அடையாளக் கார்ட் பெறுவோர் எண்ணிக்கை குறைந்தது

இராணுவத்தால் வழங்கப்படும் அடையாளக் கார்ட் பெறுவோர் எண்ணிக்கை வடமராட்சியில் குறைந்து வருகிறது.

அடையாளக் கார்ட் பெற வந்தோரில் சிலர் தலையாட்டிகள் மூலம் கைது செய்யப்பட்டதே இதற்குக் காரணம்.

கைது செய்யப்பட்டோர் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர். (இ-160)

இந்திய மருந்து வகைகளை

# பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலைக்கும் வழங்கக் கோரிக்கை

பண்டத்தரிப்பு, ஜூலை 23

இந்தியா வழங்கிய மருந்து வகைகளில் ஒரு பகுதி பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலைக்கும் வழங்கப்பட வேண்டும்.

பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் திரு. ஏ. வி. துரையப்பா யாழ்ப்பாண செஞ்சிலுவைச் சங்கத்திற்கூடாக இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பான மகஜர் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வீமன்காமம், கீரிமலை, வலித்தூண்டல், கட்டுவன், தெற்குப் புன்னாலைக்கட்டுவன், மாவைக்கலட்டி, பன்னாலை, மாவிட்டபுரம், தையிட்டி, மயிலிட்டி, சேந்தாங்குளம், கரவெட்டி, நெல்லியடி, புலோலி, கெருடாவில் மக்கள்பலர் பண்டத்தரிப்பு பட்டின சபைப் பிரதேசத்தில் தங்கியுள்ளனர்.

இப்பகுதி நோயாளருடன் இடம்பெயர்ந்தவர்களுக்கும் பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்படுவதால் இந்திய மருந்துவகைகள் இங்கும் வழங்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (இ-120)

## விநியோகம்

தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபரின் வேண்டுகோளிற்கு இணங்க வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மண்டைதீவு கிளைகளில் வைத்து ஒரு வாரத்துக்குரிய உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டன. (இ-88)

# முல்லைத்தீவில் கைதான 13 தமிழர்கள் எங்கே?

வவுனியா, ஜூலை 23

முல்லைத்தீவில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக 6 பொதுமக்கள் சிப்பாய்களினால் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்டுள்ளார்கள். 13 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

—இவ்வாறு வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர் டாக்டர் எஸ். வி. பரராஜசிங்கத்திடம் முறையிடப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டோர் தமது பிள்ளைகள் எங்கே வைக்கப்பட்டுள்ளார்கள் என்பதைக் கண்டறிந்து தெரிவிக்கும்படி பெற்றோர்கள் பிரசைகள்குழுவிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

கைது செய்யப்பட்டோர் விவரம்:-

1. இராசையா குமாரசிங்கம் (வற்றாப்பளை)
2. பரிபூரணம் சற்குணசீலன் (வற்றாப்பளை)
3. பழனி கணேசலிங்கம் (வற்றாப்பளை)
4. சிவா என்றழைக்கப்படும் தங்கராஜா புலேந்திரன் (முறிப்பு)
5. பெனடிக்ற் மருதநாயகம் (இளமருதங்குளம்-ஓமந்தை)
6. செ... எட்வேட் (இளமருதங்குளம்-ஓமந்தை) இவர்கள் இருவரும் உறவினர்களின் வீடுகளில் தங்கியிருந்ததால் கைதாக நேர்ந்தது.
7. நடனசபாபதி பத்மநாதன்.
8. நாகரட்ணம் விஜயேந்திரன் இருவரும் தண்ணீரூற்று (ப.நோ. கூ. ச அகதி முகாம்)
9. பரமநாதன் பொன்னம்பலம் (தண்ணீரூற்று)
10. இராமன் குருநாதன் (முள்ளியவளை)
11. நடராஜா சந்திரசேகரம் (... முள்ளியவளை)

(இவர்களை விட இன்னும் இருவர் கைதாகியுள்ளனர்) (உ-164)

மக்கள் முகம்

## வட்டு: கால்நடை வளர்ப்போர் சங்கம்

வட்டுக்கோட்டை, ஜூலை 23

வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் வட்டுக்கோட்டை கால்நடை வைத்தியர் திருமதி எஸ். சாம்பசிவம் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. கே. கந்தரத்தினம் உபதலைவர்: திரு சி. ஜோன் செயலாளர்: திருமதி எஸ். சாம்பசிவம் உபசெயலாளர்: திரு. ரி. விக்னேஸ்வரன் பொருளாளர்: திரு. எம். ரி ராஜ்குமார்.

12 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (இ-161)

பிரயாண ஒழுங்குகள்

★ குவைத் ★
KUWAIT

● பின்வரும் வெற்றிடங்கள் எம்மிடம் உடனடியாக நிரப்ப இருப்பதால் உடன் தொடர்பு கொள்ளவும்.

★ ஆண் ★ பெண்
இரு பாலாருக்கும் ஓர் அரியசந்தர்ப்பம்

★ ஆஸ்பத்திரி வேலையாட்கள்
HOSPITAL CLEANERS

1. Male Cleaners ஆண் வேலையாட்கள்
2. Male Supervisors ஆண் மேற்பார்வையாளர்
3. Female Cleaners பெண் வேலையாட்கள்
4. Female Supervisors பெண் மேற்பார்வையாளர்

★ 3 வருட ஒப்பந்தம்
★ இலவச தங்குமிடவசதி
★ ஒருவருட முதிர்வின் பின் வீடுவந்து செல்ல பிரயாணச்சீட்டு வசதி
Return Ticket (First Class)

● பின்வரும் ஆவணங்களுடன் உடனே வரவும்

I. பாஸ்போட் Pass Port
II. பாஸ்போட் போட்டோ பிரதி PassPort Photo Stat
III. கிராமசேவையாளரின் நற்சான்றுப் பத்திரம் Grama Sevaga Certificate
IV. பாஸ்போட்சைஸ்-புகைப்படம்07(ஏழு) Pass Port Size Photo 0

● இம்மாத இறுதியில் பிரயாணம்

முக்கிய குறிப்பு:-
★ எக்காரணம் கொண்டும் வேறு முகவர் ஊடாக வரும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

தலைமை அலுவலகம்:
Construction & Development Company Ltd.
37, S. DE.S. JEYASINGHE MAWATHA NUGEGODA.
Labour Licence No. 96

★ BES ENGINEERING CORPORATION — KUWAIT

இதற்கு வேலையாட்கள் Labourers இன்னமும் தேவையாக இருக்கின்றபடியால் விரும்புபவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்

LABOURERS 40 K. D.
★ இலவச தங்குமிடவசதி
★ இலவச உணவு வசதி
★ நாலு வருட ஒப்பந்தம்
★ இரண்டு வருட முதிர்வின் பின் வீடு வந்து செல்ல பிரயாணச் சீட்டு வசதி

தொடர்பு:
V. P Balasubramaniam
(V. P. BALA)
C/o N. V. PONNUTHURAI
School Lane,
KONDAVIL WEST.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

இதயத்தில் ஈசனைக் காணுதவன் வேறு எங்கேயும் அவனைக் காணமாட்டான்.

— இராமகிருஷ்ண பரமஹம்ஸர்

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073

23 07 1987 த.பெ.இல:- 23

## அந்தோ ஓர் ஒளிக் கீற்று...!

இன்று ஜூலை இருபத்தி மூன்றும் திகதி. தமிழர்கள் எல்லோருக்கும் நினைவிருக்கும் நாள்.

இற்றைக்கு நான்கு வருடங்களுக்கு முன் இன்றைய தினத்தில்தான், தமிழர் போராட்டத்திற்கு புதிய உத்வேகம் ஊட்டப்பட்டது. அதே 1983 ஜூலை 23 இல் தான் தமிழர்களின் ஆகக்கூடிய அவல வாழ்வும் ஆரம்பமானது.

1983 ஜூலை 23 இரண்டு வகைகளில் திருப்பு வழி. உரிமைப் போராட்டம் வேகம் அடைவதற்கான அத்திவாரம் அன்றைய தினமே இடப்பட்டது. தமிழர்கள் நரசத்தில் அனுபவிப்பதை விடவும், கேவலமான வாழ்க்கையை வாழ்வதற்கான அல்லது சாவதற்கான 'குழி தோண்டப்பட்டதும்' அதே சமவேளையில் தான்!

முதலாவதான உரிமைப் போராட்டத்தில் கடந்த நான்கு வருடங்களில் நெடுந்தூரம் கடக்கப்பட்டாயிற்று.

இந்தளவு குறைந்த இடைவெளியில், அப்பப்பா, இவ்வளவு பெரிய முன்னேற்றமா என்று, அரசியல், இராணுவ நுட்பங்கள் தெரிந்த வல்லுநர்களே மூக்கில் விரல் வைக்கும் அளவுக்கு உரிமைப் போராட்டம் முன்னேறி இருக்கிறது. மாமத யானையாக இருக்கும் அரசாங்கத்தின் வலிமைக்கு நிகர் நின்று போராடி, வெற்றிகள் பல ஈட்டிய நிலைக்கு உரிமைப் போராட்டம் வளர்ந்திருக்கிறது. அதற்குரிய சகல பெருமையும், தியாகச் செம்மல்களான தமிழ்ப் போராளிகளுக்கே.

இரண்டாவதான அவல வாழ்க்கையும் கடந்த நான்கு வருடங்களில் மிகத் துரிதமாக வெவ்வேறு பரிமாணங்களை எடுத்து விட்டது.

தமிழன் தான் பிறந்த சொந்த மண்ணில் அகதியாகும் நிலை. இடம் விட்டு இடம் பெயரும் ஊரோடும் நிலைமை. உழைப்புக்கு, உணவுக்கு வழியின்றி பட்டினி கிடக்கும் அவலம். ஈற்றில் உயிருக்கே பாதுகாப்பு உத்தரவாதம் இல்லாத இறுதி வாழ்க்கை நிலைக்கு வந்து விட்ட பரிதாபம்.

உரிமைப் போராட்டமும், தமிழன் வாழ்க்கையும் ஒன்றோடு மற்றது பின்னிப்பிணைந்தவை. அதில் ஒன்று உயர்ந்து நெடிந்து வானத்தை நோக்கிச் செல்கிறது. அடுத்தது கீழே கீழ பாதாளத்தை - நரகத்தை நோக்கிச் செல்கிறது. எனினும் முதலாவது துறை வெற்றி ஸ்தானத்தை அடையும்போது இரண்டாவது சுருங்கி வந்து சமநிலை — சாதாரண வாழ்க்கை நிலைக்கு வரும் என்ற நம்பிக்கை உண்டு.

அந்த நம்பிக்கைக்கான ஒளிக்கீற்றுஒன்று இந்த ஜூலை 19 இல்... நான்கு நாட்களுக்கு முன்பு தோன்றியிருக்கிறது.

என்றென்றும் தமிழர்களுக்குக் கைகொடுக்க முன் நிற்கும் இந்தியா (தமிழகத்தின் உந்துதலால்) உரிமைப் போராட்டத்தை அங்கீகரிக்க விருப்பம் கொண்டுள்ளது என்பதே ஈழத்தமிழர் காணும் நம்பிக்கை ஒளிக்கீற்று.

''கறுப்பு ஜூலைக்குப்'' பின்னர், கறுப்புச் சட்டைக்காரர்களான அசுரர்களாகவே மாறிவிட்ட ஸ்ரீலங்கா அரசினரை, வழிக்குக் கொண்டு வந்து தமிழர் அவலம் போக்க இந்தியா முன்னின்று உழைப்பதும் பளிங்கு போல் தெரிகிறது.

அந்தச் சிறு ஒளிக்கீற்று விரைவில் உதயமாக வடிவெடுத்து தமிழர் வாழ்வில் விடியல் காண வேண்டும்.

## கே- வி. ரி. புகழ் வாழும்!

கே. வி. ரி. என்ற மூன்று எழுத்துக்களும் தமிழ்ச் சமூகத்துக்கு மிக அடக்கமாகப் பணிபுரிந்த ஒரு மாபெரும் மனிதரைக் குறிப்பன. கே. வி. தங்கராஜா என்ற அந்தத் தங்கமான மனிதர் மறைந்து விட்டார் என்பது எல்லோருக்கும் கவலை தருவதாகும். திரு. தங்கராஜா ஓர் அரசியல்வாதியல்லர். ஆனால் அரசியல்வாதிகளை விடப் பெயர் பெற்றவர். தமது அடக்கமான சமூக, சமய, கல்விப் பணிகளால் மக்களின் மதிப்பைத் தேடிக் கொண்டவர்.

தமது நிர்வாகத் திறமையால், ஆற்றலால் அவர் பல உயர்பதவிகளை வகித்தார். நீண்டகாலமாக நட்டத்திலஇயங்கிய கிழக்கிலங்கைக் கடதாசிஆலைக் கூட்டுத்தாபனத்தை நிமிர்த்தி எழுப்பி, விஸ்தரித்துப் பெரும் கைத்தொழில் நிலையமாக்கிய ஒன்றே அவரது நிர்வாகத் திறமைக்கு எடுத்துக்காட்டாகும்.

1958 ஆம் ஆண்டு இனக் கலவரத்தின் போது. தெற்கில் அகதிகளாகியோருக்குத் தொண்டனாக நின்று பணிபுரிந்தபோதே, தமிழர்களுக்கென ஒரு தாயகம் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்று அவர் தீர்க்கதரிசனத்துடன் நினைத்திருக்க வேண்டும்.

ஈழ நாட்டிற்கு அத்திவாரமிடுவதற்குப் பத்திரிகை ஒன்று அவசியம் என அவர் உணர்ந்தார். கொழும்புப் பத்திரிகைகள் கொடி கட்டிப் பறந்த வேளையில், 1959 இல் 'ஈழநாடு' பத்திரிகையை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்தார்.

இலங்கையின் முதலாவது மாகாணத் தினசரியாக அது 29 வருடங்கள் வளர்ந்து, தமிழ்ச் சமூகத்துக்குப் பெரும்பணி புரிந்து வருகிறது. பல கஷ்டங்கள், நஷ்டங்கள் மத்தியில் அதனை வளர்த்தெடுத்து தமிழ் மக்களுக்குப் பணிபுரிந்தமை கே. வி. ரி யின் சமூகத் தொண்டின் சிகரம் எனலாம். இளமையில் இடதுசாரிப் போக்குடையவராக இருந்தவர். வாலிபர் காங்கிரஸ் இயக்கத்துடன் ஈடுபட்டு உழைத்தவர். அரசியல்வாதி ஆகாமலே மக்களுக்குச் சேவை செய்ய முடியும் என்று எடுத்துக் காட்டியவர்.

யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் பல சமய, சமூக, கல்வி ஸ்தாபனங்களை உருவாக்குவதிலும் கட்டி எழுப்புவதிலும் தொண்டனாகவே பணி புரிந்தவர். அவர் பெருங்கலை அபிமானியுமாவார். கேட்டார்க்கு இல்லை என்னது ஈயும் பெரும் வள்ளலாகவும் விளங்கியவர்.

அவரது இழப்பு தமிழ் [illegible] பேரிழப்பு. உயர்ந்த இலட்சியங்களுக்காக அடக்கமாகப் பணி புரிந்த திரு. கே. வி. ரி. நாமமும் புகழும் தமிழ் மக்கள் உள்ளவரை வாழும்.

# பாகிஸ்தானுக்கான உதவிகளை நிறுத்துக!

## அமெரிக்க வெளியுறவுக் கமிட்டித் தலைவர் கோருகிறார்

வாஷிங்டன், ஜூலை 22

பாகிஸ்தானுக்கான அமெரிக்க உதவிகளை நிறுத்தும்படி அமெரிக்க வெளியுறவுக் கமிட்டித் தலைவர் ஸ்டீபன் சோலார்ஸ் கோரியிருக்கின்றார்.

அணுக்குண்டுத் தயாரிப்புக்குத் தேவையான எஃகு மற்றும் பொருள்களை அமெரிக்காவில் இருந்தே கடத்த முயன்றதற்காக, இந்த உதவிகளை நிறுத்த வேண்டியது அவசியமாகின்றது.

இப்படி கமிட்டித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

அணுக்குண்டுத் தயாரிப்புக்குத் தேவையான பொருள்களை பாகிஸ்தானியபிரசை ஒருவர் கடத்த முயன்ற சம்பவம் தொடர்பாக அமெரிக்க செனட் வெளியுறவுக் கமிட்டி இரகசிய விசாரணை ஒன்றை கடந்த திங்கள் நடத்தியது.

அமெரிக்க ராஜாங்க அமைச்சின் உதவிச் செயலாளர் மைக்கல் ஆமகோஸ்ட் இச்சம்பவம் குறித்த தகவல்களை கமிட்டி முன் சமர்ப்பித்தார்.

பாகிஸ்தானுக்கு வழங்கப்போவதாக அமெரிக்க அரசு அறிவித்த 400 கோடி டாலர் இராணுவ பொருளாதார உதவித் திட்டத்துக்கு அமெரிக்க காங்கிரஸ் இன்னும் அங்கீகாரம் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

## பிஜியை குடியரசாக்கும் கோரிக்கை வலுக்கிறது

சுவா, ஜூலை 22

பிஜியை குடியரசாக்க வேண்டும் என்று கோரும் இயக்கம் வலுப்பெற்று வருகின்றது.

பிஜி இனத்தைச் சேர்ந்த பழங்குடித் தலைவர்கள் இதனை முன்னின்று நடத்துகின்றனர்.

குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் குடியரசாக பிரகடனப்படுத்தத் தவறினால் தாமே பிரகடனத்தை வெளியிடப் போவதாக பழங்குடித் தலைவர்கள் பயமுறுத்தி உள்ளனர்.

இதனிடையில் தற்போதைய ஜனநாயக அமைப்பில் மாற்றம் செய்வதற்கு அமெரிக்கா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாக அறிக்கை ஒன்றை சுவாவில் உள்ள அமெரிக்க அதிகாரி வெளியிட்டார்.

அந்த அறிக்கையிலேயே அமெரிக்காவின் நிலைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## ஒலிபரப்பு 60 ஆண்டு பூர்த்தி

புதுடில்லி, ஜூலை 22

ஒலிபரப்புத்துறை இந்தியாவில் அறிமுகம் செய்யப்பட்டு (புதன் கிழமை) இன்றுடன் 60 ஆண்டுகள் பூர்த்தி அடைந்துவிட்டது.

23-6-1927 இல் பம்பாயில் முதலாவது வானொலி நிலையம் இயங்கத் தொடங்கியது.

ஒரு மாதம் கழித்து கல்கத்தாவில் இரண்டாவது வானொலி நிலையம் அமைக்கப்பட்டது. (இ-எ)

## எர்ஷாட்டை பதவிதுறக்க கோரி வேலைநிறுத்தம்

டாக்கா, ஜூலை. 22

ஜனாதிபதி எர்ஷாட் பதவி துறக்க வேண்டும் என்று கோரும் 54 மணித்தியால வேலை நிறுத்தம் இன்று புதன் பங்களாதேஷில் ஆரம்பமானது.

இருபத்தொரு பெரிய எதிர்க்கட்சிகள் இவ் வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்துள்ளன.

★ ஜனாதிபதி எர்ஷாட் பதவி துறக்கவேண்டும்

★ இராணுவ ஆட்சிக்கு வழிவகுக்கும் மாவட்ட சபைத் திட்டம் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும்.

★ புதியவரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்ட புதிய வரிகள் வாபஸ் வாங்கப்படவேண்டும்—

முன்கண்ட மூன்று கோரிக்கைகளை முன்வைத்தே இவ்வேலை நிறுத்தம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

வேலைநிறுத்தம் ஆரம்பமாவதற்கு முதல்நாளே அரசுப் படைகள் ஆறு எதிர்க்கட்சித் தலைவர்களைக் கைது செய்தன.

டாக்கா பற்றும் நகர்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 50 க்கு மேலானோர் காயமடைந்தனர்.

எட்டு எதிர்க்கட்சிகள் அவாமிலீக் தலைவி ஷேக் வாஜித் தலைமையில் திப்பந்த ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை தலைநகரில் நடத்தின.

ஏனைய எதிர்க்கட்சிகளின் கூட்டு அமைப்பின் தலைவி பேகம் வாஹித், அடக்கு முறைகளுக்கு அஞ்சாது வேலை நிறுத்தம் நடத்தப்படும் என்று அறிவித்தார். (இ-எ)

## வெளி உலகில்

### எதிர்ப்பு

கேப்டவுன், ஜூலை 22

செனகல் நாட்டில் தங்கியுள்ள ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்திவிட்டுத் தாயகம் திரும்பிய தென்ஆபிரிக்க வெள்ளை இனத்தவர் குழுவுக்கு ஜோகன்னர்ஸ்பேர்க் விமான நிலையத்தில் வைத்து எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

### நாடுகடத்தப்பட்டார்

உளவு பார்த்த குற்றத்துக்காக பல்கேரிய ராஜதந்திரி ஒருவரை பிரிட்டன் நாடு கடத்தியது.

பன்னிரண்டு தினங்களில் நாட்டை விட்டு வெளியேறும்படி அந்த ராஜதந்திரியை பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சு பணித்துள்ளது.

நியாயமற்ற உத்தரவு இது என்று பல்கேரிய அரசு பிரிட்டனைக் குறை கூறியுள்ளது. (இ-எ)

# புதிய யோசனைகள்ஈழம்அமைவதற்கான ஓர் உந்துமேடை

'வடக்கு— கிழக்குக்கான புதிய போர்முலா'—

இத்தலைப்பில் திரு. காட்றி இஸ்மாயில் சண்டே டைம்ஸ் பத்திரிகையில் எழுதிய கண்ணோட்டத்தின் முதலாவது பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

ஒரு சில தினங்களுக்கு முன்னர் நம்பிக்கை என்பது வெறும் ஐந்து எழுத்துச்சொல் ஆகவே இருந்தது.

அரசு மோசமான நிலையை எதிர்நோக்க வேண்டியிருக்கின்றது என்று சிரேஷ்ட அமைச்சர்கள் தனிப்பட்ட முறையில் முன்வந்து கூறினர்.

தமிழருக்குதனி மொழி மாநிலம் கொடுக்கும்படி இந்தியா இலங்கைக்கு நிர்ப்பந்தம் கொடுத்து வந்தது.

இலங்கை அரசு இதற்கு உடன்படாமல் இருந்து வந்தது.

இன்னொரு பக்கத்தில் பெரும்பாலான எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நடப்பவற்றை அவதானமாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்.

இந்தச் சூழ்நிலையில் தொடர்ந்து பதவியில் இருக்க அரசுஎன்ன செய்யும் என்பது சாதாரண கேள்வியாகும்?

வெட்டிக்குள் அகப்பட்ட பாக்குப் போல் உள்ளோம்? — இப்படி ஓர் அமைச்சர் வாணித்தார்.

**தேர்தல் நடந்தால்...**

இன்னொரு அமைச்சர் பினவருமாறு சொன்னார்:

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவிட்டால், இன்னொரு தேர்தல் நடந்தால் அதில் வெற்றி மீட்டுவோம் என்று நப முடியாது.

நாம் பிரச்சினைக்குத் தீர்வு கண்டால், சிங்களவர்களை விற்று விட்டோம் என்று திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சொல்வார்.

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தினால் நாம் தேர்தலை வெல்ல ஒரு சந்தர்ப்பம் இடைக்கும்''—

அரசாங்கத்துக்கு இத் தெரிவை விட வேறு ஒன்றுமே இல்லை.

வடக்கு-கிழக்கு இணைப்பை அரசியல் ரீதியில் ஏற்படுத்துவது, நிர்வாகத்தை மாகாண ரீதியில் நடத்துவது— இந்த யோசனை சிங்கள மக்கள் மத்தியில் எடுபடாது.

இப்பிரச்சினை குறித்து எதிர்வரும் கிழமைகளில உணர்ச்சிகரமான விவாதங்கள் இடம்பெறலாம்.

இந்திய அரசு சொல்வதற்கு கொழும்பு அரசு விட்டுக்கொடுத்து விட்டதா? என்பதல்ல கேள்வி.

என்ன சூழ்நிலையிலும் அரசு சரியாகத் தான் நடந்துள்ளது.

**பாரம்பரிய தாயகம்**

பாரம்பரிய தாயகம் வேண்டும் என்று போராளிகள் மட்டும் கோரவில்லை. மிதவாதிகளான தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் தமிழர் தாயகம் கோரிக்கை குறித்து தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

கடந்த ஆண்டு தோல்வியில் முடிந்த பேச்சுக்களில் முக்கிய அம்சமாக இருந்தது தாயகக் கோட்பாடு தான்.

தனி மொழி மாநிலம் உளரீதியான பாதுகாப்பை சாதாரண தமிழருக்கு வழங்குகின்றது. இந்த அச்சத்தை அதிகம் வலியுறுத்த முடியாது.

மறுபக்கத்தில் தமிழர் பாதுகாப்பு, சிங்களவருக்குப் பாதுகாப்பின்மையை ஏற்படுத்தும்.

ஈழம் அடைவதற்கான உந்து மேடையாக புதிய யோசனை அமைய முடியும்.

இந்த இடத்தில்தான் இந்தியர்கள் உத்தரவாதம் தர முன்வருகின்றார்கள். அப்படி நடைபெற விடமாட்டோம் என்று இந்தியா கூறுகின்றது.

இது போதுமா?

இன்னும் கூடுதலாக உத்தரவாதம் பெற்றுக் கொடுக்க இந்தியா முன் வரவேண்டும்,

**சிங்களவர் பயத்தை நீக்க..**

சிங்களவரின் பயத்தை நீக்குவதற்கு ஒரே வழி தமிழீழக் கோரிக்கையைக் கைவிடுவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் பகிரங்கமாக அறிவிப்பதே.

அரசின் தெரிவுகள் எல்லாம் ஒவ்வொன்றாகக் குறைந்து போகின்றன. அரசைப் பலவீனப்படுத்தும் நடவடிக்கையை விட இந்தியப் பயமுறுத்தல்களே இதற்குக் காரணம். சாதாரண பொருளாதாரத் துறை தொடக்கம் இராணுவ ஆக்கிரமிப்பு வரையான பயமுறுத்தல்களே அவை.

இராணுவ ஆக்கிரமிப்பு என்பது இந்தியர்களுக்கு அவ்வளவு சந்தோஷமில்லை,

பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளுக்குப் பயந்தோ, சர்வதேச ரீதியான அவமதிப்புக்கு அஞ்சியோ இந்தியா ஆக்கிரமிப்பை விரும்பவில்லை என்று கூற முடியாது.

ஆக்கிரமிப்பு, பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்குப் பதில் மேலும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சமய சந்நிதிகளில்

### இளாலி புனித யாகப்பர் திருநாள்

கொடிகாமம், ஜூலை 23

இளாலி புனித யாகப்பர் திருநாள் கடந்த 16 ஆம் திகதி ஆரம்பமாகியது நாளை 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு தேர் சுரூப சுற்றுப் பிரகாரமும் மறுதினப் காலை திருநாள் பூசையும் திருச்சுரூப ஆசிர்வாதமும் நடைபெறும்

மிருசுவிலில் பங்குத் தந்தைஅருள்திரு அமிர்தகுமார் அடிகளார் இவற்றை நிறைவேற்றி வைக்கிறார். (இ-75)



## பொய்யாமொழி

**குறள்:**

தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்.

**பொருள் :**

ஒருவனை ஆராயாமல் தெளிவடைதலும் ஆராய்ந்து தெளிந்த ஒருவனிடம் ஐயப்படுதலும் ஆகிய இவை நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

## வித்தாரம்

என்ன முரளி, உந்தப் பக்கம் இருந்து வாறீர்? வாசிகசாலைப் பக்கம் போனனீர் போலை. பேப்பர் புத்தகம் படிச்சு வாறீராக்கும்!

என்ன புதிசா ஒரு யோசினைபற்றி ஸ்ரீலங்கா அரசாங்கம் பச்சைவிளக்குக்காட்டியிருக்கிறதைத் தான் பத்திரிகையள் எல்லாம் விளாசுகினம். அப்பிடித்தானே!

வடக்கு - கிழக்குஇணைப்பு எண்ட விஷயம் புதிய விஷயமில்லை 1931ஆம் ஆண்டிலை டொனமூர் அறிக்கையிலேயே அது இருக்குது உது எல்லாம் பழுத்த அரசியல்வாதியான ஜே. ஆருக்குத் தெரியாமல் போனதே! பழைய சரித்திரம் எல்லாம் மனப்பாடமாய் மேடைக்கு மேடை அவிழ்க்கிறவருக்கு உது தெரியாமல் இருக்க நியாயமில்லை. போனகிழமை ஜாதிக சேவக சங்கமயக் கூட்டத்திலை பேசயிக்கை எல்லாத்தையும் ஆதியோடு அந்தமாய் அவர் அளந்திருக்கிறார்.

தாங்கள் (சிங்களவர்) தமிழர்களுக்குச் செய்த அநியாயங்களை எல்லாம் பச்சை பச்சையாய் அந்தப் பேச்சிலை அவர் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

வயசு போயிட்டுதெல்லே. கட்டையில போறதுக்கு முன்னம் பூலோகத்திலையே பிராயச்சித்தம் பண்ணிவிட்டுப் போவோம் எண்டு நினைச்சாராக்கும் எண்டு எனக்குள்ளை ஒரு கற்பனை.

கொழும்பிலை இருந்து வந்த விஷயம் தெரிஞ்ச ஒருவர் என்ரை கற்பனையை சிதறடிச்சுப் போட்டார். வடக்கு — கிழக்கு இணைப்பு புதிய யோசினை எண்டது எல்லாம் இந்தியாவின்ரை நிர்ப்பந்தத் தாலைதானும்....

இப்பிடி இப்பிடிச் செய்யவேணும், அப்பிடி அப்பிடி இல்லையெண்டால், எப்பிடி எப்பிடி எல்லாம் செய்வன எண்டது தெரியுந்தானே எண்ட மாற்றுப் 'போர்முலா'' சகிதம் தான் இந்தமுறை இந்தியா விஷயத்தைக் கையாளுது எண்டு அவர் என் கற்பனையில் போட்டாரே. ஒரு போடு!

ஜூன் 2 ஆம் திகதி வளங்கள் கச்சதீவு வரை வந்து திரும்பின. ஜூன் 4 ஆம் திகதி விமானங்கள் இந்தப்பக்கத்தலை உணவுப் பொருள்களைப் போட்டன. ஜூன் 7 ஆம் திகதி'' ஸ்ரீலங்கா இந்தியாவுக்குச் 'சரண்டர்'' ஆனது எண்டு, அவர் படபட எண்டு பொரிஞ்சு தள்ளினார்.

அவர் சொன்னதைப் பாத்தா இந்தியா சொல்லுறபடியே நடக்கிற கட்டத்துக்கு ஸ்ரீலங்கா வந்துவிட்டதாக ஆருக்கும் தோன்றும். வந்தவர் எழும்பிப் போன பிறகு அவர் ஒரு இந்திய தாசராக இருப்பாரோ எண்டு எனக்குள்ளை யோசிச்சன்.

அவர் போன கையோடு கொழும்பிலை இருந்து சில நாள் தாமதமாய் வந்த கடிதம் மேசைக்கு வந்திது. பிரிச்சுப் படிச்சன்.

டிக்ஸிற் கொழும்பின் புதிய யோசனையோடு போயிருக்கிறார். ராஜீவ் இந்த யோசனைகளை ஏற்றால் தமிழ்க் குழுக்களுக்கு எடுத்துச் சொல்லப்படும். இந்த முறை தீர்வு வந்துவிடும் எண்டு தான் கொழும்பு உயர் மட்டங்கள் நம்பிக்கையோடு இருக்கினம்.

ஆனாலும் இரண்டு மூத்த அமைச்சர்கள் புதிய ஆலோசனைக்கும் ஆதரவில்லையாம். அவர்களில் ஒருவர் சிறுபான்மை இனம் ஒன்றைச் சேர்ந்தவராம்.

புதிய

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ராஜ் கோபால்ஸ்
(தற்காலிக இடம்மாற்றம், மயூரா சென்ரர் உட்புறம்)
திருமண வைபவங்களுக்கேற்ற
★ பட்டுப் பிடவைகளைப் ★
பெற்றுக்கொள்ளலாம்.
70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

23 07 1987 வியாழக்கிழமை

சகலவித
ஜவுளித் தெரிவுகளுக்கும்
மயூரா சென்ரர்
ஆர். ஜி. பில்டிங்
70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## லங்கா சிமெந்து ஊழியர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

காங்கேசன்துறை லங்கா சிமெந்து லிமிட்டெட் ஊழியர்களுக்கான விசேஷ கூட்டம் ஒன்று இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

மல்லாகம் சந்தியில் உள்ள பழம் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் நடைபெறும் இந்த கூட்டத்துக்கு அனைத்து ஊழியர்களையும் தவறாது சமுகம் தருமாறு லங்கா சிமெந்து லிமிட்டட்டின் நலன்புரிச்சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-7)

## பொலிஸ்பலம் அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 23

இந்த ஆண்டின் முடிவில் பொலீஸ் படையின் பலம் 28 ஆயிரமாக இருக்கும்.

ஆனால் அடுத்த ஆண்டில் மேலும் ஆறாயிரம் பொலீஸார் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

இதற்கான அனுமதியை இப்பொழுதே பொலீஸ் திணைக்களம் அரசிடம் கோரியிருக்கின்றது. (உ-எ)

# சர்வதேச செஞ்சிலுவை சங்கப் பிரதிநிதிகளை நாட்டுக்குள் அனுமதிக்குக

## சிவில் உரிமை இயக்கம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 23

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மனிதாபிமான முறையில் உதவ சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளை நாட்டுக்குள் அனுமதிக்கும்படி இலங்கை அரசை கொழும்பில் உள்ளசிவில் உரிமை இயக்கம் கேட்டுள்ளது.

இயக்கத்தின் அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது;

இரண்டு நாடுகளுக்கு இடையேயான இராணுவ மோதல்களுக்கு மட்டும் உரியதல்ல ஜெனிவா பிரகடனம்.

உள்நாட்டு இராணுவ மோதலையும் ஜெனிவாப் பிரகடனம் கட்டுப்படுத்தும்.

மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்நாட்டு மோதல்கள் இடம்பெற்ற நாடுகளிலும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

சிலி, எல்சல்வடோர், ஹைட்டி, மொஸாம்பிக், நிக்கரகுவா, பெரு, தென் ஆபிரிக்கா, ஸ்பெயின், உகண்டா, ஸயார் ஆகிய நாடுகளின் உள்நாட்டு மோதல்களில் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உதவ சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆகவே ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழு கருத்து உடன்பாட்டில் நிறைவேற்றிய தீர்மானத்தை ஏற்று பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உதவுமுகமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை நாட்டுக்குள் வர அனுமதியுங்கள்—

—இப்படி அந்த இயக்கம் இலங்கை அரசைக் கோரியுள்ளது. (இ-எ)

## வித்தாரம்--

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

எதிர்க்கிற பெரும்பான்மை மூத்த அமைச்சர் ஒருவரோடை தேவா சண்டை போட்டாராம்.

பிரதமரின் சரியான அபிப்பிராயம் அவர் 25 ஆம் திகதி கொழும்பு வந்த பின்னர் தான் தெரியுமாம்.

அவரின்ரை அபிப்பிராயம் சாதகமாய் இருந்தாலும்சரி, பாதகமாய் இருநதாலும்சரி மக்களின்ரை அபிப்பிராயம், அதுதான் சர்வசன வாக்கெடுப்பு நடத்தித்தான் தீர்வு அமுலாக்கப்படும் எண்டு அதி உத்தமர் சொல்லி இருக்கிறாராம்.

திம்புவிலை குடுத்த வாக்குறுதியை மறந்துவிட்டாரோ எண்டு மற்றப்பக்கத்தாலை ஒரு கேள்வி போட்டிருக்கலாம்!

## வின்சென்ட் சத்தியப்பிரமாணம்

கொழும்பு, ஜூலை 23

நாடாளுமன்றம் இன்று கூடுகின்றது.

மீண்டும் கொழும்பு வடக்கு எம். பி.யாக நியமிக்கப்பட்டுள்ள திரு வின்சன்ட் பெரேரா இன்று பதவி ஏற்கின்றார்.

டாக்டர் வேலைநிறுத்தப் பிரச்சினையை நாடாளுமன்றத்தில் எழுப்பப் போவதாக எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா அறிவித்திருக்கின்றார். (உ-எ)

### அகதிகளுக்கு

## கல்யாணமண்டபமும் பயன்படுத்தப்படும்

இராமநாதபுரம், ஜூலை, 23

அகதிகளாக தமிழ்நாடு வரும் இலங்கைத் தமிழர்களை தங்கவைப்பதற்கு 'கல்யாண மண்டபங்களையும் பயன்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுத்துவருகின்றது.

மறுவாழ்வுத் திணைக்கள இயக்குநர் திரு. பழனிச்சாமி இத் தகவலை வெளியிட்டார்.

தமிழருக்கு 'ஆடி' மாதம் பிறந்தவுடன் திருமணங்கள் நடைபெறு. ஆகவே கல்யாண மண்டபங்களிலும் இலங்கைத் தமிழ் அகதிகளைத் தங்க வைசகும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆடி மாதமாக இருந்தும் கல்யாண மண்டபங்களின் வாடகையைக் குறைக்க மண்டபங்களின் நிர்வாகங்கள் மறுத்துவிட்டன.

மாநிலத்தில் உள்ள ஏனைய 95 புயல் முகாம்களிலும் அகதிகள் தற்போது தங்க வைக்கப்பட்டு உள்ளனர். (இ-எ)

## இலங்கைப்- -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

டும்.

வன்செயல் தேவையற்றது. மேலும் இரத்த ஆறு ஓடுவதைத் தடுக்க இருதரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

—இப்படி திரு ஜோசப் கென்னடி தெரிவித்தார். (உ-எ)

## அலஸ் இன்று வருகின்றார்

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ் ஆஸ்பத்திரி விடயம் தொடர்பாக விசாரணை நடத்தும் விசேட ஆணைக்குழுவின் ஆணையாளரான முன்னாள் நீதியரசர் அலஸ் தமது குழுவினருடன் இன்று விசேட விமானத்தில் யாழ்ப்பாணம் வந்து சேருவார்.

விசாரணைகள் யாழ் செயலகத்தில் நடைபெறும் எனவும்—

இதுதொடர்பானசகல விடயங்களும் இரகசியமாக வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

### தேடுதலின்போது

## 3 வயதுக் குழந்தை கருகி மரணம்

கொழும்பு, ஜூலை 23

மட்டக்களப்பில் ஆயுத படையினர் நடத்திய தேடுதலின் போது எரிக்கப்பட்ட வீட்டினுள் உறக்கத்தில் இருந்த 3 வயதுக் குழந்தை ஒன்று கருகி உயிர் துறந்தது.

கோரகல்லிமடு என்ற கிராமத்தில் இச்சம்பவம் நடந்த திங்கட் கிழமை இடம்பெற்றது.

கிரான் முகாம் அதிரடிப்படையினர் பதுங்கி இருந்து தேடுதல் நடத்தினர். அப்போது ஆற்றில் வந்த தோணியில் இருந்தவர்கள் சிலர் பயத்தில் பாய்ந்து விட்டனர். பாயாமல் தோணியில் இருந்த இரண்டு பேரை படையினர் இறக்கிக் கரைக்குக் கொண்டுபோய் சுட்டுக் கொன்றனர்.

சரடியனாறு முகாமில் இருந்து புறப்பட்ட அதிரடிப்படையினர் மகிழவெட்டுவானுக்கு அருகில் உள்ள சின்னத் தோட்டத்தில் 8 தமிழரைச் சுட்டுக்கொன்றனர்.

இறந்தவர்களின் சடலங்கள் படையினரால் எடுத்துச் செல்லப்பட்டன. (உ-எ)

## வீரவணக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை23

நேற்று யாழ். கோட்டையில் இடம்பெற்ற நேரடி மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ''குமா'' (சு. தனபாலசிங்கம்—உயிர்த்தராசகுளம்) வீரமரணமடைந்தார். இவருக்கு வீரவணக்கம் தெரிவித்து விடுதலைப்புலிகள் அறிக்கை விடுத்திருக்கிறது. (உ)

## தமிழாராய்ச்சி....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வரும் நவம்பர் 15–19 ஆம் திகதிகளில் நடைபெறும்.

யார் மாநாட்டை நடத்துவது என்பது குறித்து அமைப்புக்களிடையே தகராறு தீர்க்கப்பட்டதைத் தொடர்ந்தேபுதிய திகதி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மாநாட்டு அமைப்புக்குழுத் தலைவராக மலேசிய அமைச்சர் திரு எஸ். சாமிவேலுவும் உபதலைவராக டாக்டர் வி. வி. டேவிடும் பணிபுரிவர். (இ-எ)

# இடைக்கால.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கீகரிக்கும் என நாம் தெரிவிக்கவில்லை. இடைக்காலத் தீர்வு எதையும் நிராகரிப்பது என்றும் கூறவில்லை.

–என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

தற்போதைய நிலைப்பாடு குறித்து சென்னையில் வெளியிடப்பட்ட விடயங்களின் விவரத்தை இங்கு மீண்டும் தர விரும்புகிறோம்.

ஈழப்புரட்சி அமைப்பானது வடக்கு கிழக்கு மலையகம் உள்ளிட்ட பிரதேசத்தில் வர்க்கரீதியாகவும் மொழிவாரி இன அடிப்படையிலும் நெருக்குதலுக்குள்ளாகியுள்ள மக்களை அணி திரட்டிய புரட்சிஒன்றையே தனது குறிக்கோளாககொண்டு தன்னைத் தயார்படுத்தி வருகிறது மலையக மக்களை முன்னணிச்சக்தியாகக் கொண்ட ஆயுதந் தாங்கிய போராட்டத்தின் மூலம் விடுவிக்கப்படும் பிரதேசங்களில் நிறுவப்படும் தனியாட்சியே இனப்பிரச்சினைக்கான இறுதித்தீர்வென நாம் கருதுகிறோம்.

இந்த இறுதி இலக்கை அடையும் வரையில் பேசப்படும் அல்லது திணிக்கப்படும் எந்த வகை தீர்வும் இடைக்கால உடன்பாடாகவே அமைய முடியும். இந்த இடைக்கால யோசனைகள் பரபரப்பை ஏற்படுத்தலாம். கெடுபிடிகளை ஒத்திவைக்க உதவலாம் ஆனால் அடிக்தள மக்களின் எண்ண அபிலாசைகளுக்கு எவ்வகையிலும் தீர்வு தராதென்பது நிச்சயமானதொன்று.

ஆதலால் இடைக்காலத் தீர்வு பற்றிய சந்திப்புக்களை நாம் அரசாங்கத்தின் போலித்தனங்களை அம்பலப்படுத்தும் சந்தர்ப்பங்களாகவும் நாம் சார்ந்த மக்களின் விருப்புக்களை வெளிப்படுத்தும் காலகட்டமாகவும் பயன்படுத்தி வருகிறோம்.

இந் நிலையில் இடைக்காலத் தீர்வில் நம்பிக்கை வைத்து பேச்சுக்களில் ஈடுபடும் தேசிய சக்திகளின் அனுபவங்களுக்கு நாம் எவறும் இடையூறாக இருந்ததுமில்லை. இருக்கப் போவதுமில்லை.

பெங்களூர் சந்திப்புக்களில், இனப்பிரச்சினையின் தீர்வு தமிழீழ விடுதலைப் புலிகளின் சம்மதத்திலேயே தங்கியிருக்கிறதென்ற நோக்கோடு விடுதலைப் புலிகளுடன் மட்டுமே பேசுகின்ற இந்திய அரசின் அணுகுமுறைக்கு நாம் பூரண ஆதரவு வழங்கியமை இதனடிப்படையிலேயே ஆகும்.

எனவே பேச்சுக்களில் கலந்துகொண்டு எமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்துவதும் அதேவேளை தீர்வு குறித்து ஏற்படக்கூடிய எந்த உடன்பாட்டுக்கும் இடையூறாக இல்லாதிருப்பதுமே எமது தீர்மானமாகும்— என்று கடிதம் தெரிவிக்கிறது. (அ-உ)

## அறிவித்தல்

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை
சிமெந்து பொதுத்
தொழிலாளர் யூனியன்

87 - 07 - 23 இன்று காலை 10.00 மணியளவில் சுன்னாகம் ஐயனார் கோவில் முன்றலில் அவசர பொதுக்கூட்டம் நடைபெறும். சகல அங்கத்தவரையும் குறித்த நேரத்தில் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அ. விஜயரட்ணம்
செயலாளர்

(1352)

## பிரயாண ஒழுங்குகள்

★ HORIZON ENTERPRISES ★

1987 தை மாதம் முதல் சென்ற மாதக் கடைசி வரையில் எம்மால் பிரயாணம் மேற்கொண்டோர் பெயர் விபரங்கள் நாளை வெளிவரும்.

நாம் பிரதி வாரந்தோறும் பிரயாணம் செய்வோரின் பெயர் விபரங்களை தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றோம்.

✭ குவைத் ✭ மாலைதீவு
✭ பாஹ்ரெயின் ✭ சவுதி அரேபியா

முதலான மத்திய கிழக்கு நாடுகளுக்கான அனைத்து வேலை வாய்ப்புகளிற்கு செல்ல விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

அவ்வப்பகுதி மக்களின் வசதிகளை முன்னிட்டு 2 கிளைக் காரியாலயங்கள் எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

விலாசம்:
R. குணரத்தினராசா
கண்டி வீதி, கொடிகாமம்.
(கொடிகாமம் புகையிரத நிலையம் முன்பாக)
இலியாஸ் ஏபிரகாம் A. P.
இரண்டாம் வட்டாரம், அல்லைப்பிட்டி.

தலைமைக் காரியாலயம்:
A. பத்மதாஸ்
97/1, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

கடிதமூலம் தொடர்பு கொள்ள விரும்புவோர் சுய விலாசமிடப்பட்ட முத்திரையொட்டிய கவருடன் தொடர்பு கொள்ளவும்.

நேரில் தொடர்பு கொள்வோர் காலை 8 மணி முதல்–மாலை 6 மணி வரையுள்ள காரியாலய நேரத்தில் சந்திக்கவும்.

# புதிய யோசனைகள்...

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

பிரச்சினைகளை உருவாக்கிவிடும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

உள்ளே நுழைவது இலகு; வெளியேறுவது அப்படி அல்ல.

தங்களுக்குத் தேவையானதை அடைவதற்கு மோதலை சிறிது சிறிதாக அதிகரிப்போம் என்பதை இந்தியா சுட்டிக்காட்டியது.

இந்தியாவின் உதவியுடனோ, இன்றியோ இது ஏற்கனவே நடந்துவிட்டது.

### புலிகளுக்குக் கிடைத்த ஆயுதம்

வடமராட்சியின் 'விடுதலை' யின் பின்னர் 30 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். 50 சிப்பாய்கள் காயமடைந்தனர் என்பதோ:

அல்லது திடீரென்று வெடித்த வன்செயலில 24 சிப்பாய்கள் கடந்த வாரம் இறந்தனர் என்பதோ அல்ல முக்கியம்.

திடீரென்று கணக்கிலடங்கா எண்ணிக்கையில் புலிகளுக்கு ஆயுதங்கள் கிடைத்தன என்று கூறப்படுவது தான் முக்கியமானது.

புதிய இராணுவ முகாம்கள் மீது மோட்டார்த் தாக்குதல்களை விடுதலைப்புலிகள் நடத்துகின்றனர்.

பல மாதங்களுக்குப் பின்னர்புலிகளின் எதிர்த் தாக்குதல்கள் முற்பக் [illegible] தங்கள் நிர்வாகத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ள வடமராட்சியில் உள்ள புலோலியில் 'ஹெலி'யை இறக்க இராணுவம் கஷ்டப்படுகிறது.

வீதிகளினூல் இலகுவில் சிப்பாய்கள் போக்குவரத்துச் செய்ய முடியாது.

யாழ் குடாநாட்டின் ஏனைய பகுதிகள் போல் முகாமுக்குள் இராணுவம் இருக்க வேண்டிய நிலைதான் சிறிது சிறிதாக ஏற்பட்டு வருகின்றது.

### இன்னொரு இராணுவத் தாக்குதல்

குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் இன்னொரு இராணுவத் தாக்குதலை நடத்துவதே தற்போது உள்ள மாற்று வழி.

பலத்த ஆட்சேதம், மற்றும் கஷ்டங்கள் மத்தியில் யாழ்ப்பாணம் பட்டினத்தை இராணுவத்தால் வெற்றிகரமாகக் கைப்பற்ற முடியும் என்பது எல்லாருக்கும் இப்போது தெளிவாகத் தெரிகின்றது.

இதற்குத்தான் கடந்த மே மாதம் ஆரம்பிக்கப்பட்ட 'ஒப்பரேஷன் லிபரேஷன்' உத்தியில முதலிடம் கொடுக்கப்பட்டது.

வடமராட்சியுடன் நிறுத்தப்படுவதல்ல இத்திட்டத்தின் நோக்கம்.

### புதிய யோசனை

புதிய [illegible] ஒர [illegible] வித்தை மாதிரி அமைந்துள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் நிர்வாக ரீதியில் தனித்தனி மாகாணங்களாக இருக்கும்.

ஆனால் இரண்டுக்கும் ஒரு மாகாணசபை இருக்கும். இதற்கு மாற்றாக டிச.19 யோசனையில் கூறப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் அதிகாரங்கள் அம்மாகாணசபைக்கு வழங்கப்படும்.

இது தமிழீழ விடுதலைப் புலிகளின் சமஷ்டிக் கோரிக்கைக்கு எவ்வளவோ குறைவானது ஆகும்.

புதிய யோசனையை அமுல் நடத்தும் உத்தரவாதத்தை இந்தியா அளிக்கும். அது மட்டுமல்ல புலிகளையும் இதை ஏற்றுக்கொள்ளச் செய்வர்.

அத்துடன் தீர்வு காணப்பட்ட பின்னர் ஏற்படும் தமிழர் தரப்பு வன்செயல்களையும் கட்டுப்படுத்த இலங்கைக்கு உதவுவர்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுககள் நடத்தப்படமாட்டா.

கொடுப்பதை ஏற்றுக்கொள்ளும்படி புலிகள் கோரப்படுவர்.

இலங்கை அரசு தரப்பின்படி பந்து இப்போது இந்தியாவின் பக்கம் என்று கூறப்படுகின்றது.

இந்திய நிர்ப்பந்தம் சமாளிக்கப்பட்டாயிற்று. காலம் பெற்றாகிவிட்டது. (வளரும்)

## நீத்தார் பட்டியல்

### ஆறுமுகம் அப்பையா

கொக்குவிலைச் சேர்ந்த ஆறுமுகம் அப்பையா (முன்னாள் – யாழ்ப்பாணம் ஆ. அப்பையா அன் கோ. உரிமையாளர்) காலமானார்.

அன்னார் காலம்சென்ற ஆ. தம்பிமுத்து, ஆ. மயில்வாகனம், திருமதி. கனகம்மா, பாக்கியம் சின்னம்மா ஆகியோரின் சகோதரரும், ம விவேகானநதனின் (விவேகானந்தாஸ்) சிறியதகப்பனும், க. தர்மலிங்கத்தின் (அஜந்தாஸ்) வளர்ப்புத் தந்தையாரும் நா. நவரத்தினம், நா. பற்குணம், சி. அருந்ததி, த. தவமணி ஆகியோரின் மாமனுருமாவார்.

ஈமைக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் கொக்குவில் நந்தாவிலில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கொக்குவில் மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
க. தர்மலிங்கம்

(1354)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர் து அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 23-07-1987.

P ted and Published by New Uthayan Publi ions (Pvt) Ltd at 292/2 Navalar Road Jaffna on Thuresday July 23, 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org